இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 51 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 13 – ஞாயிற்றுக்கிழமை 29 செப்டம்பர் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 51: Thiruvalluvar Year - 2055 - Purataasi 13 - Sunday 29 September 2024 - Chennai 16 Pages ₹ 5.00






கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.09.2024) காஞ்சிபுரத்தில் நடைபெற்ற கழகத்தின் 75ஆம் ஆண்டு பவள விழா பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.விரமணி, கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் – நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., கழக துணைப் பொதுச் செயலாளர்கள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசிய தலைவர் காதர் மொய்தீன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சியின் சார்பில் ஈ.ஆர். ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகன் உள்ளிட்ட பல்வேறு கூட்டணி கட்சித் தலைவர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், உள்பட மாவட்ட கழகச் செயலாளர்கள், கழகத்தின் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள். உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கழகம் நூற்றாண்டைக் கடப்பதற்குள் மாநில சுயாட்சிக் கொள்கையை வென்றெடுக்க உறுதியேற்போம்!

# தி.மு.க. விதைக்க நினைக்கும் சிந்தனைகளுக்கு அடித்தளம்தான் தோழமை இயக்கங்கள் ஒன்றாக இருக்கும் இந்த மேடை!

## காஞ்சியில் நடைபெற்ற கழக பவள விழாப் பொதுக்கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

**காஞ்சிபுரம், செப். 29 -**

**கஞ்சிபுரத்தில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், "தி.மு.க. விதைக்க நினைக்கும் சிந்தனைகளுக்கான அடித்தளம்தான் தோழமை இயக்கங்கள் ஒன்றாக இருக்கும் இந்த மேடை" எனவும், கழகம் நூற்றாண்டைக் கடப்பதற்குள், மாநில சுயாட்சிக் கொள்கையை வென்றெடுக்க உறுதியேற்போம் என்றும் குறிப்பிட்டார்.**

காஞ்சிபுரத்தில், நேற்று (28-9-2024) மாலை நடைபெற்ற கழகத்தின் பவள விழாப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு : -

"எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்; இங்குள்ள தலைவர்கள் ஒன்றாதல் கண்டே!"... "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்; இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!"...

"எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்; இங்குள்ள தலைவர்கள் ஒன்றாதல் கண்டே!"... "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்; இங்குள்ள தமிழர் காஞ்சியில் ஒன்றாதல் கண்டே!"...

வீழ்ச்சியுற்ற தமிழ்நாட்டை எழுச்சி பெற வைக்கத் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் இயக்கத்தை உருவாக்கிய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சி மண்ணில், அவர் உருவாக்கிய பேரியக்கத்தின் பவள விழாவை நடத்திக் கொண்டி



ருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் பெருமை! அதை உருவாக்கிய அண்ணா அவர்களுக்கும் பெருமை!

**வான்மழை வாழ்த்தில் உருவான கழகம் - இன்று வையகம் வாழ்த்த வளர்ந்திருக்கிறது!**

1949 செப்டம்பர் 17ஆம் நாள் இந்த இயக்கத்தை சென்னை ராயபுரம் ராபின்சன் பூங்காவில் பேரறிஞர் அண்ணா அவர்களும், அவருடைய தம்பிமார்களும் தொடங்கியபோது, வானம் தன்னுடைய வாழ்த்துகளை மழையாகப் பொழிந்தது. வான் மழை வாழ்த்தில் உருவான கழகம் தான், இப்போது வையகம் வாழ்த்தும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது!

கழகத்தின் வெற்றி மூலமாகத் தமிழ்நாட்டை வளர்த்தார் பேரறிஞர் அண்ணா. பேரறிஞர் அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்ற தலைவர் கலைஞர் அவர்கள், அரைநூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தையும், அதன்மூலமாக தமிழ்நாட்டையும் வளப்படுத்தினார்! தலைவர் கலைஞர் விட்டுச் சென்ற பாதையில் இருந்து, இம்மியளவும் விலகாமல் திராவிட மாடல் ஆட்சியை நாம் நடத்தி வருகிறோம்.

தி.மு.க. என்ற மூன்றெழுத்தில்தான், நம்முடைய மூச்சும் பேச்சும் உயிரும் உணர்வும் அடங்கி இருக்கிறது. இப்படிப் பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க, கழகத்தின் பவளவிழா சிறப்புக் கூட்டத்துக்கு வருகை தந்து வாழ்த்துகளை தெரிவித்திருக்கும்


தொடர்ச்சி 4 ஆம் பக்கம்


### தமிழ்நாடு அமைச்சரவை மாற்றியமைப்பு!

# இன்று துணை முதலமைச்சராகிறார் உதயநிதி ஸ்டாலின்!

## புதிய அமைச்சர்களாக வி.செந்தில் பாலாஜி – கோவி.செழியன் – ஆர். ராஜேந்திரன்– ஆவடி சா.மு.நாசர் நியமனம்!

**சென்னை, செப். 29-**

**தமிழ்நாடு அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இன்று துணை முதல்வராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்கிறார். மேலும் புதிதாக வி.செந்தில் பாலாஜி, கோவி.செழியன், ஆர். ராஜேந்திரன் , ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் அமைச்சர்களாக இன்று பொறுப்பேற்கின்றனர்.**

இன்று முதல் துணை முதலமைச்சர் பொறுப்பை உதயநிதி ஸ்டாலின் கவனிப்பார் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

அமைச்சர் உதயநிதிக்கு ஏற்கெனவே இருக்கும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையுடன் திட்டமிடல் மற்றும் வளர்ச்சி துறையும் கூடுதலாக வழங்கப்படுகிறது.

வி.செந்தில் பாலாஜி, கோவி. செழியன், ஆர்.ராஜேந்திரன், ஆவடி சா.மு. நாசர் ஆகியோரும் புதிய அமைச்சர்களாகப் பதவியேற்கிறார்கள்

மனோ தங்கராஜ், செஞ்சி மஸ்தான், கா.ராமச்சந்திரன் ஆகியோர் அமைச்சரவையிலிருந்து விடுவிக்கப் படுகின்றனர்.











**அமைச்சர்களின் இலாகாக்கள் மாற்றம்**

அமைச்சர் க.பொன்முடி வனத்துறையை கவனிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதனுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் கயல்விழிக்கு மனிதவள மேம்பாட்டுத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் மதிவேந்தனுக்கு ஆதிதிராவிடர் நலத்துறையும், ராஜகண்ணப்பனுக்கு பால்வளத் துறையும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் தங்கம் தென்னரசுக்கு நிதி, காலநிலை மாற்றத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதிய அமைச்சர்கள் இன்று மாலை 3.30 மணியளவில் பதவியேற்பார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.